ஆசிரியர் : நாரண—துரைக்கண்ணன்

விசிஷ்டாத்வைத மத ஸ்தாபகர்

ஸ்ரீ இராமாநுஜாசாரியார்



பி. டி. பெல் அண்டு கம்பெனி,

7, சுங்குராம செட்டி தெரு, :: ஜி. டி., மதராஸ்.

விலை அணா 2.

உலக மக்களின் அறியாமை இருளை அகற்ற அவதரித்த
மதாசாரியர்களின்

ஜீவிய சரித்திரங்கள்

ஆசிரியர் :
நாரண - துரைக்கண்ணன்
அவர்களால் இயற்றப்பட்டது.

அத்வைத மத ஸ்தாபகர் :
ஸ்ரீ சங்கராசாரியார்.

விசிஷ்டாத்வைத மத ஸ்தாபகர் :
ஸ்ரீ இராமானுஜாசாரியார்.

துவைத மத ஸ்தாபகர் :
ஸ்ரீ மத்வாசாரியார்

ஆர்ய சமாஜ ஸ்தாபகர் :
ஸ்ரீ தயானந்த சரஸ்வதி

கிறிஸ்தவ மத ஸ்தாபகர் :
ஏசு கிறிஸ்து

இஸ்லாம் மத தீர்க்கதரிசி :
முகம்மது நபி

சீக்கிய மத ஸ்தாபகர் :
குரு நானக்

இந்து முஸ்லீம் சமரச ஞானி :
கபீர்தாஸ்

மேவார் நாட்டு இராஜபக்தை :
மீராபாய்

சமதர்ம போதகர் :
கார்ல் மார்க்ஸ்

பிரதி யொன்றுக்கு விலை அணா 2.

மேற் கண்ட பத்து பிரதிகளுக்குத் தபால் சார்ஜ் உட்பட ரூபாய் 1—10—0 மணியார்டர் அனுப்பினால் புஸ்தகங்களை அனுப்பிவைக்கப்படும்.

கிடைக்குமிடம் :

பி. டி. பெல் அண்டு கம்பெனி
சுங்குராம செட்டி தெரு, ஜி. டி. மதராஸ்.

ஓம்:

விசிஷ்டாத்வைத மத ஸ்தாபகர்

ஸ்ரீ இராமானுஜாசாரியார்

முதல் அத்தியாயம்

சரணாகத மார்க்கத்தைப் போதித்த தயாபரர்.

"சேர வாரும், செகத்தீரே! சேர வாரும். ஒன்று சேர வாருங்கள். உலகோரே! ஓடி வாருங்கள். இது தான் தக்க தருணம். இச்சமயம் தப்பினால் எச்சமயம் வாய்க்குமோ! எது நேருமோ! தெரியாது. ஆதலால், இப்போதே வாருங்கள். எல்லோரும் வாருங்கள். என்றும் இறவா நிலையளிக்கும் அமிழ்தத்தை வழங்கிய அமலப்பிரான் அருளைப் பெற விரைந்து வாருங்கள்! மானிடர்களே!" என்று ஒரு மனிதர் ஸ்ரீ சௌம்ய நாராயணமூர்த்தி கோயில் கோபுர மதிலின் மீது நின்று கொண்டு உரத்த குரலில் கூவிக்கொண்டிருந்தார்.

அதிகாலை. அருணன் பன்னிறக் கிரணங்களாகிய குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தி வர, ஒளிமுதல் தலைவனாகிய சூரியன் ஆயிரம் முகங்களுடன் தேஜோமயமாய்ப் பிரகாசிக்க, குணதிசையிலிருந்து விரைந்து வந்துகொண்டிருந்தான். செவ்வொளி வட்டத்திடையே திகழும் தினகரனைப் போன்று, இருட் படலத்தைக் கிழித்து வரும் உதய ஞாயிறின் கிரணங்கள் ஞானவொளிபோல் சூழ்ந்து பிரகாசிக்க அம்மனிதர் கம்பீரமாகத் திகழ்ந்துகொண்டிருந்தார். ஆறடிக்கு மேற்பட்ட உயரம்; சிவந்த மேனி; மெலிந்த தேகம்; காஷாய கோலம்; கருணை ததும்பும் கூரிய விழிகள்; திருமண் திகழும் அகன்ற நெற்றி; முழங்கால் வரை தொங்கும் நீண்ட கரங்

கள் இத்தனே லட்சணங்களுங் கொண்ட அம்மனிதர் “ஞானத்தின் திருவுருவோ!” என்று அதிசயிக்கும்படியாகக் காணப்பட்டார். அவருடைய கம்பீர தோற்றம் யாவருடைய உள்ளத்தையும் கவரக் கூடியதாயிருந்தது. இப்பேர்ப்பட்ட மனிதர், “வம்மின் உலகீர்! வந்து மூர்துமின்!” என்று கூப்பிட்டால், மக்கள் திரண்டு வருவதற்குக் கேட்கவா வேண்டும்? அவர் கூவிய இரண்டொரு நொடியிலேயே பெருங்கூட்டஞ் சேர்ந்துவிட்டது. அவ்வூரிலுள்ள பரம ஏழைமுதல் பெருஞ்செல்வன் வரை ஆண், பெண், சிறுர், முதியோர் முதலிய பல திறப்பட்டவர்களும் அங்கு வந்து குழுமிவிட்டனர்.

அம்மனிதர் அந்த மக்கள் கூட்டத்தை நோக்கிப் பேசலானுர்: “மானிடர்களே! கேளுங்கள். நாம் பல பிறவிகளில் செய்த பெருந் தவத்தின் பயனுகவே, இம் மனிதப் பிறவியைப் பெற்றிருக்கிறேம். இப்பிறவி தப்பினுல் எப் பிறவி வாய்க்குமோ! ஆதலால், இந்த மனிதப் பிறவியைத் தக்கபடி பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இம் மனித தேகம் இருக்கும்போதே நாம் ஆத்ம சாக்ஷாத்காரத்தைப் பெற்றுவிட முயலவேண்டும். நாம் இம்மனிதப் பிறவியெடுத்த நோக்கமே என்ன தெரியுமா! நம்மைப் படைத்த பரம்பொருளின் திருவடிகளே வழிபட்டு உய்வதற்காகத்தான். ஆகவே, நமக்குக் கிடைத்திருக்கும் நல்ல இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது, இறைவன்மீது பக்தி செலுத்தி உய்யுங்கள். அப்பெருமானின் பத மலர்களில் ‘அபயம்!’ என்று சரணுகதி யடையுங்கள். சர்வ ஜீவ தயாபரனுன திருமால் உங்களே “அஞ்சேல்!” என ஆட்கொண்டு அருளுவான். ஆதலால், கூறுங்கள், “ஓம்: **நமோ நாராயணுய நம**” என்று. மனனஞ் செய்யுங்கள்; அம்மகா மந்திரத்தை! “**நாராயண**” என்னும் **நாமத்தை** நீங்கள் மறந்தாலும் உங்கள் நாக்கு மறவாது சொல்லும்படி பழகுங்கள். இந்த அஷ்டாக்ஷர மந்திரத்தை ஓதி உங்கள் பிறவி அல்லலேயெல்லாம் போக்கிக்கொள்ளுங்கள். இகத்துக்கும் பரத்துக்கும் உறுதி தேடிக்கொள்ளுங்கள். முத்திப் பேற்றைப் பெறுங்கள். சொல்லுங்கள். “ஓம்: **நமோ நாராயணுய நம**” என்னுந் தாரக மந்திரத்தை; சொல்லுங்கள் மகாஜனங்களே!” என்று முழங்கினர்.

“**ஓம்: நமோ நாராயணுய நம:**”
“**ஓம்: நமோ நாராயணுய நம:**”
“**ஓம்: நமோ நாராயணுய நம:**”

என்று எல்லா மக்களும் பக்தி பரவசத்தோடு வாய் நிரம்ப மொழிந்து முழக்கஞ் செய்தனர்.

"குருஸ்வாமி! சங்கதி தெரியுமோ!"

"என்ன! என்ன !!"

"அக்கிரமம்; அக்கிரமம்; அறத்துக்கு அழிவு வந்துவிட்டது; உலகத்துக்கு நாசகாலம் தான்" என்று நாலைந்து வைணவர்கள் விழுந்தடித்து ஓடி வந்து தங்கள் ஆசாரியன் முன் பெருமூச்சு வாங்கக் கூறலாயினர்.

"விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்டார் குரு. அவர் தான் வைணவ சமய ஆசாரியராக விளங்கிய **ஆளவந்தாரின்** பிரதம சிஷ்யர்களில் ஒருவரான **ஸ்ரீ கோஷ்டி பூரணர்.**

சிஷ்யர்களில் ஒருவர், "நேற்று ஒரு மனிதர் வந்தாரோ இல்லையோ, உங்களிடம் உபதேசம் பெற; ஸ்ரீரங்கத்திலிருந்து......" என்று கூறத்தொடங்கினர்.

"ஆமாம்; அவருக்கென்ன?" என்று பதைப்போடு கேட்டார் கோஷ்டி பூரணர்.

"அவருக்கு ஒன்றுமில்லை; சுவாமி! அந்த மனிதன் நீங்கள் உபதேசித்த மகாமந்திரத்தை, நாராயணமூர்த்தி கோயிலின் முன் இருந்து எல்லோருடைய காதிலும் படும்படிச் சொல்லிவிட்டான்" என்று நடந்த விஷயத்தைக் கூறி முடித்தார் மற்றொரு சிஷ்யர்.

"என்ன! உண்மையாகவா! அவன் அப்படியா செய்தான்?" என்று படபடக்கக் கேட்டார் கோஷ்டி பூரணர்.

"நாங்கள் பொய் என் சொல்லப்போகிறோம்; சுவாமி!" என்று கூறினர் சிஷ்யர்கள்.

கோஷ்டி பூரணர், "அவனை ஓடிப்போய் அழைத்து வாருங்கள்; நான் கூப்பிட்டதாகக் கூறுங்கள்" என்று கட்டளையிட்டார். சிஷ்யர்கள் விரைந்தோடினர்.

அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம், மேற்குறித்த மனிதர் கோஷ்டி பூரணர் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். அவரைக் கண்டதும் கோஷ்டி பூரணருக்கு எற்பட்ட கோபஞ் சொல்லி முடியாது.

"**இராமாநுஜா!** என்ன காரியஞ் செய்தாய்? இவ்வித அடாத செயலை நீ புரியலாமா!" என்று அதட்டிக் கேட்டார்.

இராமாநுஜர் ஆம்; இராமாநுஜர்தான். நாம் இதுவரை குறித்துவந்த மனிதர்—கோயில் கோபுர மதிலின்மீது நின்று மக்க

ளுக்கு மகா மந்திரத்தைப் பகிரங்கமாக உபதேசஞ்செய்த மனிதர் ஸ்ரீ இராமாநுஜர்தான். **விசிஷ்டாத்துவைத மதத்தை** உலகில் ஸ்தாபித்த இராமாநுஜர்-சாதாரண பாமர மக்களும் சுலபமாக அநுஷ்டித்து மோக்ஷத்தையடைய வழிசெய்யும் **சரணாகத மார்க்கத்தை** ஏற்படுத்திய இராமாநுஜர் - **வேதவியாசரின் பிரம சூத்திரத்துக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவான்** அருளிய **பகவத்கீதைக்கும்** விசிஷ்டாத்துவைத பரமாகப் **பாஷியம்** செய்த **பாஷியகாரர் ஸ்ரீ இராமாநுஜர்** - வைணவ குரு பரம்பரையில் குறிப்பிடத் தக்கவராக வந்து வைணவ சமயக் கொள்கையைப் பரவச் செய்த **ஸ்ரீ இராமாநுஜாசாரியார்** இவர்தான்.

இராமாநுஜர் விநயமாக, "குருமூர்த்தி! நான் அறிந்து தவறொன்றும் செய்யவில்லையே!" என்று கூறினார்.

கோஷ்டி பூரணர், "தவறொன்றும் செய்யவில்லையா? நீ செய்த குற்றம் உனக்கே தெரியவில்லையா? மிகா இரகசியமான மகா மந்திரத்தை - யாருக்கும் சொல்லக்கூடாது என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டு உபதேசித்த அஷ்டாக்ஷர மந்திரத்தை நீ பாமர ஜனங்களைக் கூட்டிப் பகிரங்கப் படுத்தியது குற்றமில்லையா? இதைவிட பெருங் குற்றம் வேறென்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

இராமாநுஜர் ஒன்றும் பேசவில்லை. கோஷ்டி பூரணர் மீண்டும், "இம் மாமந்திரம் வீதியில் கூறப்படும் மந்திரமென்று நினைத்துக்கொண்டாய்? பரிபக்குவம் வாய்ந்தவர்களுக்குக்கூட எளிதில் கூறப்படுவதல்லவே! நீ இம்மந்திரத்தை என்னிடம் உபதேசம் பெற எத்தனை காலம் தவமிருந்தாய் என்று உனக்கு நினைவில்லையா?" என்று வினவினார்.

இராமாநுஜர், "ஆமாம்; மிகச் சிரமப்பட்டுத்தான் பெற்றேன்" என்று அடக்கமாகக் கூறினார்.

கோஷ்டி பூரணர், "அப்படியிருக்க, இத்தாரக மந்திரத்தைத் தெருவோடு போகும் மக்களுக்கெல்லாம் நீ தெரிவிக்கலாமா! இக் குற்றத்துக்கு - பிறர்க்கு உரைக்கக் கூடாது என்ற குருமொழியை மீறி, தெரிந்தே செய்த இக் குற்றத்துக்கு - என்ன தண்டனை கிடைக்கும், தெரியுமா?" என்று கேட்டார்.

இராமாநுஜர், "தெரியும். ரௌரவாதி நரகம் சித்திக்கும்" என்று பணிவோடு கூறினார்.

கோஷ்டி பூரணர், "இவ்வளவு தூரம் தெரிந்துமா, நீ மகா மந்திரத்தின் மகிமையைப் பாழ்ப்படுத்தத் துணிந்தாய்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

இராமாநுஜர், "இல்லை; சுவாமி! நான் எல்லாருக்கும் கூறிய தனால் மகா மந்திரத்தின் மகிமை மழுங்கவில்லை; அதைவிட உயர்வே செய்தது. ஆயிரக்கணக்கான பேர் மகா மந்திரத்தை உணர்ந்தார்க ளல்லவா! அவர்கள் வாயிலாக உலக முழுதும் வெகு எளிதாகவும் விரைவாகவும் பரவி, அம்மந்திரத்தின் சக்தியும் மகிமையும் ஓங்கும். தங்கள் வார்த்தையை மீறிப் பலருக்கும் மந்திரத்தைக் கூறியதால், நான் ஒருவனே குற்றத்தைச் செய்தவனாகிறேன்: அக்குற்றத்தின் பலனாக ரௌரவாதி நரகத்தையடையவேண்டியவனாகிறேன். ஆனால், என் குற்றத்தின் பயனாக, ஏக காலத்தில் எத்தனைபேர் பிறவிப்பயனை எய்தினார்கள்? அவர்கள் வாயிலாக, சந்ததி சந்ததியாக எத்தனை கோடிக் கணக்கான மக்கள் பாசபந்தங்களினின்றும் நீங்கி இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாவார்கள்? இது ஒன்று போதாதா! இத்தனை பேர் முத்திப்பேறு எய்த நான் ஒருவன் நரகஞ் செல்வதா பெரிது? சுவாமி! நான் தங்கள் திருவடியைத் துணையாகக்கொண்டு நிரயத் துன்பத்தை யநுபவிக்கத் துணிந்து விட்டேன். ஆதலால், குருமூர்த்தி! தாங்கள் எனக்கு எவ்விதமான தண்டனையையும் சாபத்தையும் தரலாம். ஏற்று அனுபவிக்க நான் சித்தமா யிருக்கிறேன்" என்று கூறினார்.

கோஷ்டி பூரணர் பிரமித்துப் போய்விட்டார். சில விநாடிகள் வரை அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. 'ஆ! என்ன தியாகம்! என்ன தன்னலத் தியாகம்!! என்ன சர்வஜீவதயை! மக்கள்மீது எவ்வளவு காருண்யம்!' என்று அவர் மனம் வியந்தது. கோஷ்டி பூரணரது அறிவை மறைத்திருந்த சம்பிரதாய மாயை விலகியது. ஆகவே, அவர் இராமாநுஜரை ஆதரத்துடன் அணைத்து, "இராமாநுஜா! உன்னுடைய பெருங்குணம் என்னைச் சிறியனாக்கிவிட்டது! நாணித் தலை குனிய வைத்துவிட்டது! உனக்குள்ள ஜீவதயை எனக்கு இல்லாதுபோய் விட்டதே! நான் எவ்வளவு கற்றும் எவ்வளவு ஞானம் பெற்றும் என்ன பயன்? பரமஞானியான உனக்கு நானா குருவாயிருக்கத் தக்கவன்? நீயன்றோ ஆசாரியன்? எனக்கு மட்டுமல்ல; உலக மக்கள் அனைவருக்கும் பரமாசாரியனா யிருக்கத் தக்கவன்? 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாள'னாகிய உன்னால் மனித வர்க்கம் நிச்சயம் உய்தி பெறும். முத்தி நெறியை அணுகும். நீ இவ்வுலகில் நீடூழி வாழ்ந்து மனித சமுதாயத்தை வாழ வைப்பாயாக" என்று வாழ்த்தினார். இராமாநுஜர், "குருமூர்த்தி! இன்றே என் ஜன்மம் சாபல்ய மடைந்தது! நான் கிருதார்த்த னானேன்!" என்று கூறிக் கோஷ்டி பூரணர் திருவடிகளை யெடுத்து தம் சிரத்தின் மீது சூட்டிக்கொண்டார்.

கோஷ்டி பூரணர் கூறியபடி—ஆசீர்வதித்தபடி - ஸ்ரீ இராமாநுஜர் பிற்காலத்தில் வைணவ குரு பரம்பரையில் குறிப்பிடத் தக்கவராய் - வைணவர்களுக் கெல்லாம் ஆசாரியராய் - விசிஷ்டாத்வைத மத சித்தாந்தத்தை விளக்கஞ் செய்தவராய் விளங்கினர் என்பது அவரது வாழ்க்கை வரலாற்றை முறையே பார்த்தால் தெரியும். ஸ்ரீ இராமாநுஜர் இயற்கையிலேயே பரந்த மனோபாவமும், விரிந்த நோக்கமும் உடையவராய் இருந்ததால்தான், **நம்மாழ்வார்** போன்ற மகானுபாவர்களுக்குப்பின் வைணவர்களுக்கு நாயகமாகத் திகழ்ந்தார்; **ஆளவந்தாருக்குப்** பின் வைணவ சமயாசாரியராய் விளங்கினர்; **விசிஷ்டாத்வைதம்** என்னுஞ் சிறந்த கொள்கையைக் கண்டுபிடித்து மக்களிடையே பரப்பும் பேராற்றலைப் பெற்றார்: **பகவத்கீதை, பிரம சூத்திரம்** ஆகிய ஞான நூல்களுக்கு விசிஷ்டாத்வைத பரமாகப் பாஷியஞ் செய்து, **'பாஷியகாரர்'** என்று பிரபலமடைந்தார். மனித சமூகம் உய்வதற்கே பிறந்த இராமாநுஜர் மனித சமுதாயத்துக்கு எவ்வகையில் சேவை செய்து நல்வழி காட்டினர் என்பதை, இனி அவரது சரித்திர வாயிலாக அறிவோம்.

இரண்டாவது அத்தியாயம்

இராமாநுஜரின் இளமைப் பருவம்.

ஸ்ரீ இராமாநுஜர் பிங்கள வருஷம் சித்திரை மாதம் சுக்கில பக்ஷம் குருவாரம் பஞ்சமி ஆருத்திரா நட்சத்திரம் கர்க்கடக லக்கினத்தில் அதாவது கி. பி. 1017-ஆம் ஆண்டில் இப்பூவுலகில் பிறந்தார். இவருக்குத் தந்தையாக வாய்ந்தவர் **ஆசூரிகேசவ சோமயாஜி** ஆவார். தாயார் **காந்திமதி** அம்மையார். இவர் ஸ்ரீ ஆளவந்தாருடைய மாணவர்களில் ஒருவரான ஸ்ரீ சைல பூரணரின் மூத்த சகோதரியாராவார்.

சென்னை மாநகருக்கு மேற்கே 26 மைல் தூரத்தில் ஸ்ரீ பெரும்பூதூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இக்கிராமத்தில் தான் கேசவ சோமயாஜியும், காந்திமதி தேவியும் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். இவர்களுக்கு வெகு காலமாக மகப்பேறு இல்லாமலிருந்தது. இது ஒரு பெருங்குறையன்றோ ! ஒரு சமயம் ஸ்ரீ சோமயாஜி ஸ்ரீ பெரும்பூதூரிலிருந்து சென்னைத் திருவல்லிக்கேணிக்கு வந்திருந்தபோது சந்திரகிரகணம் ஏற்பட்டதால் கடல் நீரில் மூழ்கிவிட்டு ஸ்ரீ பார்த்தசாரதி கோயிலுக்குப் போய் இறைவனை வழிபட்டு, அக்கோயில் வாயிலிலேயே மகப்பேறு வேண்டி ஒரு நோன்பு நோற்றார். இதற்குப்

பின்னரே, ஈசாசாரியன் திருவருளால் ஸ்ரீ இராமாநுஜர் சோமயாஜிக்கு மைந்தராக ஸ்ரீ பெரும்பூதூரில் வந்து தோன்றினர். தம் சகோதரிக்கு நீண்ட காலத்திற்குப் பின்னர் குழந்தை பிறந்திருக்கிறது என்று கேள்விப்பட்ட ஸ்ரீ சைல பூரணர் ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீ பெரும்பூதூருக்கு வந்தார். குமாரனின் முகப் பொலிவையும் தேஜஸையும் கண்டு மகிழ்ந்த அப்பெரியார், "பரிபூரண புருஷருக்கு இருக்க வேண்டிய பரிசுத்த லக்ஷணங்கள் அனைத்தும் இக்குழவியிடம் அமைந்திருப்பதால், லக்ஷ்மணன் என்று பெயர் வழங்கட்டும்" என்று கூறி ஆசீர்வதித்தார். ஆனால், ஸ்ரீ வரதராஜரும் ஸ்ரீ மகா பூரணரும் பின்னர் வைத்த இராமாநுஜர் என்ற பெயர்தான் பிரபலமாக வழங்கலாயிற்று.

இராமாநுஜர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பிள்ளைமைப் பருவத்தைக் கடந்தார். சோமயாஜி மகா பண்டிதர்; யஜுர்வேதத்திலுள்ள சிக்ஷை ஸ்ரௌதம் முதலிய விஷயங்களை வியாக்கியானஞ் செய்யும் முறையில் 'கேசவீயம்' என்ற பெயரோடு பல நூல்களை இயற்றியிருக்கிறார்; ஆதலால், அவர் இராமாநுஜருக்கு ஐந்தாவது வயதிலிருந்து தாமே கல்வி புகட்டத் தொடங்கிச் சகல கலைகளையும் கற்றுக்கொடுத்து வந்தார். இதனிடையே அவர் இராமாநுஜருக்கு உபநயனஞ் செய்வித்தார். பின்னரே, அவர் வேத உபநிடதங்களைப் போதிக்கலானர்.

இராமாநுஜருக்குப் பதினறு வயதாயிற்று. கேசவ சோமயாஜி தமது நெருங்கிய உறவிலேயே **தஞ்சம்மாள்** என்ற பெண்மணியைப் பார்த்து இவருக்குத் திருமணஞ் செய்துவைத்தார். இவ்விதம் இராமாநுஜரை ஆளாக்கிவிட்ட சோமயாஜி தாம் தவமிருந்து பெற்ற பிள்ளை பிற்காலத்தில் பெரும்சித்தி பெற்று ஆசாரிய புருஷராகி, விசிஷ்டாத்வைத மதம் என்ற பெயரால் ஒரு புதிய கொள்கையை ஏற்படுத்தி அழியாப் புகழ் எய்திய நிலையைக் கண்டு மகிழக் கொடுத்து வைக்காது இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இராமாநுஜர் சமய தத்துவங்களை அறிய விரும்பி, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திருப்பூற்றுக்குழி என்னும் கிராமத்தில் இருந்த **யாதவப் பிரகாசர்** என்னும் பேரறிஞரை அடைந்தார். இவர் மகா வித்வான் மட்டுமல்ல; ஓர் அத்வைத சந்யாசியுமாவார். உலக குரு ஸ்ரீ சங்கராசாரியாருக்கு மாணவரா யிருந்தவர்; ஆனல், அவரது கொள்கைகள் சிலவற்றில் மாறுபட்டு வியாசர் இயற்றிய பிரம சூத்திரத்துக்கு வியாக்கியானம் எழுதி யிருக்கிறார். இத்தகைய தகுதி

ளால் அவர் அக்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றவராய் ஏராளமான மாணவர்களை யுடையவராய் இருந்தார். ஆதலால், நம் இராமானுஜர் அவர்பால் சமய தத்துவங்களை அறியச் சென்றதில் ஆச்சரியமில்லை. இவரைப் பின்பற்றி இவரது ஒன்றுவிட்ட சகோதரர் கோவிந்தரும் யாதவப் பிரகாசரை ஆசாரியராய் அடைந்தார்.

யாதவப் பிரகாசரிடஞ் சென்ற சில நாட்களுக்கெல்லாம் இராமானுஜர் அத்வைத சமயத்தின் கொள்கைகளை முற்றுங் கற்றுத் தெளிந்தார். அதுமட்டுமல்ல; அவர் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யருமானார். யாதவப் பிரகாசர் அத்வைத சமயக் கொள்கைக்குத் தத்துவார்த்தங் கூறி வருகையில், இராமானுஜர் அவரது அபிப்பிராயங்கள் சிலவற்றிற்குச் சந்தேகங்களைத் தெரிவித்தும் ஆட்சேபங்களை எழுப்பியும் வரலானார். இவ்விதம் இராமானுஜர் ஐயமும் மறுப்பும் எழுப்பிய இடங்களிலெல்லாம் யாதவப் பிரகாசருக்கும் மயக்கமே யுண்டாயிற்று. அவரால் இராமானுஜரின் சந்தேகங்களைத் தீர்க்கவும் முடியவில்லை; ஆட்சேபங்களுக்குச் சரியான பதில் சொல்லவும் இயலவில்லை. ஆகவே, இராமானுஜர் ஆசாரியரைத் தெளிவிக்கும்படிக் கேட்ட பகுதிகளுக்குத் தமக்குத் தோன்றும் பொருளையும் அபிப்பிராயங்களையும் கூறி இவை சரிதானா என்று கேட்கலானார். அவ்விதம் அவர் கூறிய பொருள் தாம் கூறியதினும் மிகப் பொருத்தமா யிருப்பதை யறிந்து யாதவப் பிரகாசர் மனதுள் வியப்பார். ஆனால், வெளிப்பட ஒப்புக்கொள்ளாது வீண் தர்க்கம் செய்வார். ஏனென்றால், தமது புலமைக்கும் ஆசிரியத் தன்மைக்கும் இழுக்கு வந்துவிடக்கூடும் என்ற அச்சமே யாகும். இராமானுஜரோ எப்போதும் போலவே, ஆசாரியார்பால் அன்பும் மதிப்புங் காட்டி, அடக்கமாக நடந்துவந்தார்.

இந்நிலையில், காஞ்சி யரசனிடமிருந்து யாதவப் பிரகாசருக்கு அழைப்பொன்று வந்தது. ஏனென்றால், அவ்வரசன் மகளைப் பிரமராக்ஷஸ் பிடித்தாட்டி வந்தது. இதை விரட்ட அரசன் பேர் பெற்ற மந்திரவாதிகளை யெல்லாம் வரவழைத்தான். ஆனால், யாராலும் அப்பேயை ஓட்ட முடியவில்லை. "மகா ஞானியான யாதவப் பிரகாசரை வரவழைத்தால், அவரைக் கண்ட மாத்திரத்திலேயே இப்பேய் உயிருக்கு அஞ்சி ஓடிவிடும்" என்று அரசவையி லுள்ளவர்களில் ஒருவர் கூறவே, அரசன் அவரை யழைத்துவர ஆள் விடுத்தான்.

"இப்பேயை விரட்டுவதற்கு நான் வரவேண்டுமோ? நான் இங்கிருந்தே ஓடு என்றாலே அது ஓடிவிடுமே" என்று முதலில் அலட்

சியமாகக் கூறி நகைத்தாராஞலும், பின் யாதவப் பிரகாசர் அரண்மனைக்குத் தம் சிஷ்யர்கள், மற்றும் அரசபரிவாரங்கள் புடைசூழச் சென்ருர்.

பிரம ராக்ஷஸோ, 'யார் வந்தாலும் என்னை ஒன்றும் பண்ண முடியாது' என்று கூறி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. இச் செய்தியைக் கேட்டுக் கொண்டே அரண்மனையினுள் நுழைந்த யாதவப் பிரகாசர் மகா சக்தி வாய்ந்த மந்திரம் ஒன்றை உச்சரித்த வாறே அரசிளங்குமரியை அணுகினர்.

இவரைக் கண்டதும் பேய் பிடித்த கோமகள், "ஆ! ஊ!" என ஆரவாரஞ் செய்து, "மந்திரம் ஜபித்து என்னை ஓட்டிவிடலாமென்று மனப்பால் குடிக்கிருயா ?' நீ என்ன மந்திரம் ஜபிக்கிருய் என்பது எனக்குத் தெரியும். அது என்னை இம்மியளவும் அசைக்க முடியாது என்பதை நீ அறிவாயாக" என்று கூறி அவரைப் பிய்த் தெறிந்துவிட முயல்வதுபோல் கைகளை நெறித்தது.

யாதவப் பிரகாசருக்கு ஆத்திரமும் அவமானமும் சொல்லி முடியாது. ஆயினும் தம்மை யடக்கிக்கொண்டு அவர், "அப்படியாஞல், உன்னை யாராலும் எம் மந்திரத்தாலும் விரட்ட முடியாதா ?" என்று கேட்டார்.

பிரமராக்ஷஸு, "நான் அப்படிச் சொல்லவில்லையே! அகம்பாவம் பிடித்த உன்ஞல் என்னை விரட்டமுடியாது என்றுதான் சொன்னேன். இந்த அரசகுமாரியிட மிருந்து என்னைப் போய்விடுமொறு கட்டளையிடக்கூடிய மகா புருஷன் இங்கேயே இருக்கிருர். அவர் ஆணையிட்டால் நான் ஜன்ம சாபல்ய மடைந்து போய் விடுவேன்" என்று கூறியவாறு, யாதவப் பிரகாசரின் பின்னே அடக்க வொடுக்கமாக நின்றிருந்த இராமாநுஜரை நோக்கிச் சென்று அவரது கால்களில் விழுந்து வணங்கியது.

யாதவப் பிரகாசரும் மற்றவர்களும் வியப்பும் திகைப்பும் அடைந்தனர். பின் யாதவப் பிரகாசர் தம் பெறலரும் மாணவரைப் பார்த்து, "இராமாநுஜா! அப்பேய் கூறியதைக் கேட்டாயல்லவா! ஆகவே, அரசகுமாரியின் அல்லலைத் தீர்க்க நீ முற்படுவாயாக" என்று கூறினர்.

"தங்கள் சித்தம், என் பாக்கியம்" என்று இராமாநுஜர் கூறிய வாறு, அரசிளங் குமரியை கருணையோடு நோக்கிப் பின், "அலகையே! இக்குழந்தையைப் பிடித்தாட்டுவதஞல் கண்ட பலன்

என்ன? இவளைத் துன்புறுத்துவதோடு, நீயும் துன்பத்தைத் தானே அனுபவிக்கிறாய்? ஆதலால் அவளை விட்டுவிடு. இன்றிருந்து நீ இப் பேய்த் தன்மையி னின்றும் நீங்கி, நன்னிலை எய்துவாயாக" என்று கூறியருளினார்.

பிரம ராக்ஷஸும் இராமாநுஜரின் திருவடி தீக்ஷையைப் பெற்று, அரசகுமரியை விட்டு நீங்கியது. அடுத்த கணம், அரசிளங் குமரி உறக்கத்திலிருந்து விழித்து எழுபவள்போல் உணர்வு பெற் றாள். உடனே அவள் தான் ஆடவர் பலரிடையே இருப்பதை யறிந்து நாணங் கொண்டு, தன் தந்தைக்குப் பின்னே போய் நின்று, "நடந்ததென்ன?" என்று கேட்டாள்.

அரசன், தன் மகளுக்கு அவளைப் பிரம ராக்ஷஸு பிடித்தநி லிருந்து இதுவரை நடந்த நிகழ்ச்சி யனைத்தையும் சுருக்கமாகக் கூறி னான். உடனே, கோமகள் இராமாநுஜரது காலடியில் விழுந்து வணங்கித் தன் நன்றியைத் தெரிவித்து அந்தப்புரத்துக்குச் சென்றாள்.

பின்னர் மன்னன் இராமாநுஜருக்கும் யாதவப் பிரகாசருக்கும் தகுந்த சன்மானங்கள் அளித்துக் கௌரவப்படுத்தி வழியனுப்பி னான்.

இச்சம்பவத்துக்குப் பிறகு, இராமாநுஜரது அறிவும் ஆற்றலும் எங்கும் பிரசித்தியாயிற்று. ஸ்ரீரங்கத்தில் வைணவ சமயாசாரியராய் விளங்கி வந்த ஸ்ரீ ஆளவந்தாருக்கும் இராமாநுஜரின் விஷயம் எட்டி யது. தாம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருக்கும் ஆசாரிய புருஷன் அவதரித்து விட்டான் என்று அவர் அறிந்து பெருமகிழ்ச்சியுற்றார். ஆகவே, அவர் இராமாநுஜரைக் காண காஞ்சிபுரத்துக்குத் தம் மாண வர்களுடன் சென்றார். குருமூர்த்தியின் வருகையை யறிந்த காஞ்சி பூரணர் என்ற சிறப்புப் பெயரையுடைய திருக்கச்சி நம்பியார் தம் பரிவாரங்களுடன் ஆளவந்தாரை எதிர்கொண்டு போய் வரவேற்றார்.

குருவும் சிஷ்யரும் குசலப்ரச்னம் விசாரித்துக்கொண்ட பின்னர், அனைவரும் வரதராஜப் பெருமானின் ஆலயத்துக்குச் சென்றனர். ஆளவந்தார் தம் சிஷ்யக் கூட்டத்துடன் கோயில் பிரகாரத்தை வலம் வருகையில் எதிரே ஒரு பெருங்கூட்டம் வருவதைக் கண்டு வியப்புற் றார். "வருவது யார்?" என அவர் திருக்கச்சி நம்பியாரைக் கேட் டார்.

"குருமூர்த்தி, யாதவப் பிரகாசர் தம் சிஷ்யர்கள், பரிவாரங்கள் புடை சூழ வருகிறார்" என்று நம்பி பதிலளித்தார்.

ஆளவந்தார் அவனுடன், "அப்படியானால், இக்கூட்டத்தில் இராமாநுஜர் என்ற இளைஞரும் இருப்பார் அன்றோ?" என்று வினவினார்.

நம்பியார், "பெருமானே! அதோ உயரமாக ஒரு மனிதர் செல்கிறாரே, அவர்தான் நீங்கள் கேட்கும் இராமாநுஜர்" என்று சுட்டிக் காட்டினார்.

ஆளவந்தாரின் அருள்விழிகள் இராமாநுஜரை ஆதரத்தோடு நோக்கின. அச்சமயம் அவருக்கு உண்டான மகிழ்ச்சி சொல்லி முடியாது. ஆனால், அவர் இராமாநுஜரை யழைத்துப் பேசவில்லை. இராமாநுஜரைக் காண்பதற்கென்றே ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சி வந்த ஆளவந்தார் அவரைக் கண்டு பேச முயலாததன் காரணமென்ன என்று நமக்குப் புலப்படவில்லை. ஆனால், அவர் தமக்குப் பின் இராமாநுஜரை ஆசாரிய புருஷராக்குமாறு வேண்டி, வரதராஜப் பெருமான் மீது 'ஸ்தோத்ர ரத்நம்' என்ற பாமாலையைத் தொடுத்தார். கடைசியாக, அவர் நம்பியார் வழியனுப்பத் தம் சிஷ்யர்களுடன் ஸ்ரீரங்கம் திரும்பிச் சென்றார்.

இஃதிங்ஙனமிருக்க, யாதவப் பிரகாசர் தமது சிஷ்யர்களுக்கு உபநிடத பாடம் சொல்லி வருகையில், ஒருநாள் தைத்திரேய உபநிடதத்தில் உள்ள, "சத்தியம் ஞானம் அநந்தம் பிரஹ்மா:" என்ற சுலோக மொன்றுக்குப் பொருள் கூறலானார். ஆனால், அவர் அதற்கு நேரான பொருள் சொல்வதற்குப் பதிலாகத் தம் மேதா விலாசத்தைத் தெரிவிக்கும் நோக்கத்தோடு, "பசுவுக்குக் கொம்பு உண்டு: இல்லை என்றும், கொம்பு உடைந்ததென்றும் ஏககாலத்தில் கூறினால் எவ்வளவு பொருத்தமோ, அவ்வளவு பொருத்தம்தான் பிரஹ்மத்துக்குச் சத்தியம், ஞானம், அநந்தம் என்னும் லட்சணங்கள் உண்டென்று சொல்வதுமாகும்" என்று குதர்க்கமாகக் கூறினார்.

இராமாநுஜருக்கு இதைக் கேட்கச் சகிக்கவில்லை. ஆகவே, அவர் தம் இருக்கையை விட்டு எழுந்து யாதவப்பிரகாசரைப் பணிவாக நோக்கி, "ஐய, அப்படி என் வலிந்து பொருள் கொள்ளவேண்டும்? இதற்கு இப்படி பொருள் கொண்டால் பொருத்தமாயிருக்கும் என்று எனக்குப் படுகிறது. அதாவது சத்தியம் என்பது நிலையான பொருள் என்பதையும், ஞானம் என்பது அறிவு மயமானது என்பதையும், அநந்தம் என்பது பரத்துவம் அளவுக்குட்படாதது என்பதையும் குறிப்பதால், பிரஹ்மமானது நித்தியமாயும் சித்து, அசித்து என்னும் பிரபஞ்சங்கள் இரண்டுக்கும் அப்பாற்பட்டதாயும், ஆனால் எல்லாமாயும்

உள்ளது என்று இச்சுலோகத்துக்குச் சிறந்த பொருள் சொல்ல லாம்" என்று கூறி முடித்தார். யாதவப் பிரகாசர் திகைத்துப் போய் விட்டார். இராமாநுஜர் கூறிய வியாக்கியானத்தை மறுத்துக்கூற வேண்டுமென்று முயன்றும் அவரால் இயலவில்லை; ஆகவே, அவர் பேசாம லிருந்துவிட்டார்.

இதுபோன்று இராமாநுஜர் யாதவப் பிரகாசருடன் மாறுபடக் கூடிய சந்தர்ப்பங்கள் அடிக்கடி நிகழலாயின. இதன் பயனாக, யாத வப் பிரகாசருக்குத் தம் சிஷ்யர்களில் ஒருவன் பேரறிவு வாய்ந்தவனா யிருப்பதற்கு மகிழ்ச்சிகொள்ள வேண்டியதற்குப் பதிலாகப் பொறாமை ஏற்பட்டது. அவரைக் காணும்போதெல்லாம் இவருக்கு வெறுப் புணர்ச்சியே யுண்டாயிற்று. இவ்வுணர்ச்சி முற்றியதன் பயனாக அவர் ஒருநாள் இராமாநுஜரை நோக்கி, "இராமாநுஜா! நான் உனக்குக் கற்றுக்கொடுக்கும் கல்வியினால் ஏற்படும் அறிவுத் திற மையை என்னிடத்திலேயே காட்டி வருகிறாயே; இது நியாயமா? வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாக இருக்கிறது உன் செயல்; நீ மகா மேதாவியாய் விட்டாய். இனி, உனக்கும் எனக்கும் ஒத்து வாராது. ஆகவே, நீ என்னைவிட்டுப் போய்விடுவதுதான் நல்லது" என்று கோபத்தோடு கூறினார்.

இராமாநுஜர் குருவுக்குக் கோபமுண்டாகும்படி நடந்து கொண்டதற்காக, மிகவும் வருந்தினார். அவர் சிறிதுநேரம் தயங்கி இச்சமயம் குருவின் சொற்படி நடந்து கொள்வதுதான் உசிதமான தென்ற முடிவுக்கு வந்து, "தங்கள் சித்தமதுவானால், அப்படியே நடந்து கொள்கிறேன்" என்று விநயமாகக் கூறி விடைபெற்று வீடு திரும்பினார்.

இராமாநுஜரது பிரிவு யாதவப் பிரகாசரின் உள்ளத்தில் பெரும் புயலை யுண்டுபண்ணியது. 'இராமாநுஜன் அறிவு முதிர்ச்சி யடைய அடைய நமது புலமையும் புகழும் இருக்குமிடம் தெரியாமல் மங்க வேண்டியதுதான். ஆதலால், இவனை எப்படி யாயினும் தொலைத்து விட வேண்டும்' என்ற தீர்மானத்துக்கு அவர் வந்தார். ஆகவே, அவர் தமக்கு அணுக்கமான சிஷ்யர்களுடன் கலந்தாலோசித்து, அவனைக் கூடிக் குலாவியே கொல்ல வேண்டுமென்று அதற்குத் தகுந்தபடி, ஒரு சூழ்ச்சி செய்யலானார்.

இத்திட்டத்தின்படி, சில சிஷ்யர்கள், இராமாநுஜரிடம் சென்று அவரை யழைத்து வந்து யாதவப் பிரகாசருடன் சமாதானஞ் செய்து வைத்தனர். ஆகவே, இராமாநுஜர் பழையபடி குருவுக்குரிய குற்றே

வல்களைச் செய்து பாடம் கேட்டு வந்தார். சில நாட்களாயின. யாதவப் பிரகாசர் தாம் இவ்வுலக வாழ்வு முடிவதற்குள் கங்கையில் மூழ்கிப் புண்ணியம் பெற விரும்புவதாக ஒரு நாள் தம் சிஷ்யர்களிடம் கூறித் தீர்த்த யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படிக் கட்டளை யிட்டார்.

குருவின் ஆணைக் கிணங்க, சிஷ்யர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்து கடைசியாகத் தீர்த்த யாத்திரையைத் தொடங்கினர். யாதவப்பிரகாசரின் சிஷ்யர்களில் கோவிந்தர் என்பார் ஒருவர். இவர் இராமாநுஜருக்கு ஒன்றுவிட்ட சகோதரர்; ஆதலால், அவர் இராமாநுஜரைக் கங்காநதியில் மூழ்த்திக் கொன்றுவிடச் செய்திருக்கும் சதியைத் தெரிவித்துத் தப்பித்துவிட வேண்டுமென்று முயன்றார். ஆனால், மற்ற சிஷ்யர்கள் அதற்கு இடங்கொடுக்காது இராமாநுஜருடன் எப்போதும் இணைபிரியாதிருந்து வந்தனர்.

யாதவப்பிரகாசரும் சிஷ்யர்களும் விந்திய மலையை யடைந்தனர். இங்கு இவர்கள் இரண்டொரு நாள் தங்கினர். இதனிடையே ஒரு நாள் விடியற்காலையில் இராமாநுஜர் மற்றவர்கள் உறக்கத்தினின்றும் விழிப்பதற்கு முன்னே எழுந்து காலைக் கடன்களை முடிக்க, காட்டினுள் சென்றார். இவரைச் சூழ்ந்திருக்கும் விபத்தினின்றும் காப்பாற்றுவதிலேயே கருத்தாயிருந்த கோவிந்தர் திடுக்கிட்டு எழுந்து அவர் பின்னே சென்று ஏகாந்த இடத்தை யடைந்ததும், இராமாநுஜர் பால் யாதவப்பிரகாசரின் சதிக் கருத்தைத் தெரிவித்து, உடனே தப்பித்து ஓடிவிடுமாறு எச்சரித்தார். இராமாநுஜருக்கு ஏற்பட்ட ஆச்சரியமும் துக்கமும் சொல்லி முடியாது. பொறாமை யுணர்ச்சி எப்பேர்ப்பட்ட பெரியார்களையும் பொல்லாதவர்களாக்கி விடுகிறதே என்று எண்ணி யேங்கினர். வேறு வழியின்றி, அவர் கோவிந்தர் யோசனைப்படி, அவ்விடத்தைவிட்டு விரைந்து நடக்கலானர். கோவிந்தர் ஒருவருக்குந் தெரியாமல் பழையபடி மற்றவர்களுடன் கலந்து கொண்டார்.

பொழுது விடிந்ததும், இராமாநுஜர் மறைந்துவிட்ட செய்தி அனைவருக்குந் தெரிந்தது. அவர்கள் அவரைப் பல விடங்களிலுந் தேடியும் அகப்படாது போகவே, கங்காதீரத்தை நோக்கி நடக்கலாயினர்.

இராமாநுஜரோ காட்டில் வழிதெரியாது அலைந்து திரிந்து கல்லிலும் முள்ளிலும் கால்வைத்து நடந்ததனுல், அவை குத்திக் காயமுண்டு பண்ணின. பசியும் களைப்பும் காதை அடைத்தன.

தாகத்தால் நாவுலர்ந்தது. துன்பம் பொறுக்க முடியாது இறைவனை நோக்கி முறையிட்ட இராமாநுஜர் கடைசியாக மூர்ச்சையாய் விழுந்தார். அவர் மீண்டும் கண் விழித்தபோது பேரழகு வாய்ந்த ஒரு வேடுவத் தம்பதிகள் தமக்கு வேண்டிய சைத்தியோபசாரங்கள் செய்து கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றார். அவர் தமக்கு வழிகாட்டும்படி அவ் வேடுவத் தம்பதிகளை வேண்டிக்கொண்டார். அவர்களும் அப்படியே செய்வதாகக் கூறி உடன் அழைத்துச் சென்றனர். அன்றிரவு அவர்கள் ஓரிடத்தில் தங்கினர். இராமாநுஜர் உறங்கி விழித்துப் பார்த்தபோது, அவர்களைக் காணவில்லை. எங்கெங்கேயோ தேடிப் பார்த்தார். கடைசியாக, அவர் ஒற்றையடிப் பாதையொன்றை யடைந்து இது எந்த இடம் என்று வழிப்போக்கர்களைக் கேட்டார். அவர்கள் வாயிலாக, அவர் தாம் காஞ்சிபுரத்தின் எல்லையை அணுகி விட்டதாக அறிந்து பேராச்சரிய முற்றார். அப்போதுதான் தமக்கு வழி காட்டிய வேடுவத்தம்பதிகள் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் என்று அவர் அறிந்தார்.

கடைசியாக, இராமாநுஜர் இறைவன் திருவருளை வியந்து தம் இல்லம் நாடிச் சென்று அன்னையாரிடம் நடந்த தனைத்தையும் தெரிவித்தார். அம்மையார் பெருமாளுக்கு நன்றி செலுத்தி, ' இறைவன் நம்மைக் கைவிடமாட்டார், குழந்தாய்!—நீ திருக்கச்சி நம்பியாரிடம் சென்று நிகழ்ந்ததைச் சொல். வரதராஜரின் பரிபூரண அருள்பெற்ற அவர் உனக்கு வழி காட்டுவார்" என்று கூறினர். அதன்படியே இராமாநுஜர் போய், திருக்கச்சி நம்பியாரிடம் விஷயத்தைச் சொல்ல, "இராமாநுஜர்! எதையும் சிந்தனை செய்யாதே! இனி நீ ஈசன் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருவாய்" என்று கட்டளை யிட்டார்.

சில நாட்களில் யாதவப்பிரகாசரும் சிஷ்யர்களும் காஞ்சிக்குத் திரும்பினர். அங்கு இராமாநுஜர் இருப்பதைக் கண்டு அவர்கள் வியப்பும் விதிர்ப்பும் கொண்டனர். யாதவப்பிரகாசர் இராமாநுஜர் அற்புத சக்திவாய்ந்த அதிசய புருஷர் என்று தீர்மானித்து, இனி, அவர்மீது கெட்ட நினைவு கொள்வது தவறு என்றுஉணர்ந்து, அவரைத் தம்மிடம் வரவழைத்துப் பழையபடி மாணவரா யிருக்கும்படி செய்து கொண்டார். இராமாநுஜரும் சென்றதைக் கருதாது அவர்பால் பக்தி விசுவாசத்துடன் நடந்து வந்தார்.

ஆனால், இந் நட்பு நீடித்து நிற்கவில்லை. ஒருமுறை அறுந்து விட்டது மறுபடியும் ஒன்று கூடுவதென்றால், அது கூடுமா? யாதவப்பிரகாசர் சுருதிகளுக்கு அத்வைத பரமாகப் பொருள் கூறி இதுவே சிறந்தது என்றார். இராமாநுஜர் இவ்விஷயத்தில் தமக்குச் சந்தேக

முண்டாயிருப்பதாகக் கூறி அவர் கூறி வரும் ஒவ்வொரு பொருளுக்கும் ஆட்சேபந் தெரிவிக்கலானார். யாதவப்பிரகாசருக்கு அடக்கமுடியாத ஆத்திரமுண்டாயிற்று. "இராமாநுஜா! மூன்றாவது முறையாக நீ நான் கூறிவரும் வியாக்கியானத்தை ஆட்சேபித்திருக்கிறாய்? அதிகப் பிரசங்கித்தனமான உன் செயலை இனி என்னால் பொறுக்க முடியாது. உனக்கு ஆணவம் மேலிட்டு விட்டது. உன் அறிவுக்குத் தகுந்தபடி பாடம் போதிக்கக் கூடியவர்களிடம் நீ போய்ப் படிக்கலாம்" என்று கண்டிப்பாகக் கூறினார். இராமாநுஜர் ஒன்றும் பேசாது அவரை வணக்கஞ் செய்து விட்டு வெளியேறினார்.

பின்னர் இராமாநுஜர் தாயின் சொற்படி மீண்டும் திருக்கச்சி நம்பியாரை யடைந்து, அவரது கட்டளைக் கிணங்க, வரதராஜப் பெருமாளுக்குக் கைங்கரியம் செய்து வந்தார்.

மூன்றாவது அத்தியாயம்.

ஆளவந்தாரை ஆசிரியராகக் கொள்ளல்

இவ்விதமிருக்க, ஸ்ரீ ரங்கத்தில் இருந்த ஸ்ரீ ஆளவந்தார் வயதாய் விட்டதால், தமக்குப் பதிலாக ஆசாரியர் பதவியை ஏற்க, இராமநுஜர் வரமாட்டாரா என்று எம்பெருமானை இறைஞ்சிக் கொண்டிருந்தார். இச்சமயத்தில் இராமாநுஜர் யாதவப்பிரகாசரை விட்டுப் பிரிந்து, வரதராஜப் பெருமாளுக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி அவர் செவிக்கு எட்டியது. ஆளவந்தார் பெருமகிழ் வெய்தி, இராமாநுஜரைத் தம்மிடம் அழைத்து வருமாறு தமது சிஷ்யர்களில் முக்கியமானவரான மகாபூரணரைக் காஞ்சிக்கு அனுப்பினார்.

இதனிடையே, ஆளவந்தாருக்குப் பிளவை கண்டிருந்தது. இதற்குப் பலவிதமான ரண சிகிச்சை செய்தும் ஆறாமலிருந்து வந்தது. மகா பூரணர் காஞ்சிக்குப் போயிருந்த சமயம் இப்பிளவை நோய் அபாயகரமான நிலையை அடைந்துவிட்டது. 'இராமாநுஜர் வருவதற்குள் தாம் எம்பெருமான் திருவடிகளை அடைந்துவிட நேருமோ' என்று ஆளவந்தார் எண்ணினார். அப்படி ஒரு வேளை நேர்ந்துவிட்டால், தாம் இராமாநுஜருக்கு உபதேசிக்க வேண்டுமென்று கருதியிருக்கும் மகா மந்திரங்களைத் தமது பிரதம சிஷ்யர்களான கோஷ்டி பூரணர், வரரங்கர் முதலியவர்களுக்கு உபதேசித்து, பின்னர் இராமாநுஜருக்கு உபதேசம் புரியுமாறு கட்டளை யிட்டார்.

ஆளவந்தார் எதிர்பார்த்த வண்ணமே வைகாச மாதத்தில் பருவுடலை நீத்து நண்ணுடலோடு இறைவனின் இணையடி நீழலைச் சேர்ந்தார். வைணவ சமயாசாரியரின் இப்பிரிவு சிஷ்யர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெருந்துயரை அளித்தது. வரரங்கர் ஆசாரியருக்குச் சமாதி யடக்கக் கிரியைகளை, அவரது மூத்த குமாரரான பிள்ளைக்கரசு நம்பியைக் கொண்டு செய்விக்கலானார். ஆளவந்தாரின் புனித சரீரம் காவிரி யாற்றங்கரையில் அடக்கஞ் செய்யக் கொண்டு செல்லப்பட்டது. இதே சமயத்தில் காஞ்சிக்குச் சென்றிருந்த மகா பூரணர் இராமாநுஜரை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கத்துக்குத் திரும்பி வந்தார். இவர் திருக்கச்சி நம்பியாரான காஞ்சிபூரணரின் உதவியைக் கொண்டு, இராமநுஜரைக் கூட்டிக்கொண்டு வரலானார். இவர்கள் ஸ்ரீரங்க நகருள் நுழைகையில் மக்கள் திரள் திரளாக வந்து கொண்டிருப்பதைக் கண்டு, 'விசேஷமென்ன' என மகா பூரணர் கேட்கலானார். கூட்டத்திலிருந்த ஒருவர் ஆளவந்தாரின் மறைவைத் தெரிவித்ததும், இருவரும் மன அதிர்ச்சி தாங்காமல் மூர்ச்சையுற்றனர். இராமாநுஜருக்கு ஏற்பட்ட துயரஞ் சொல்லிமுடியாது. "நான் பாக்கியமற்றவன்" என்று அவர் வாய் புலம்பியது.

பின்னர், மகாபூரணரும் இராமாநுஜரும் ஒருவாறு மனந்தேறி காவிரி யாற்றங்கரைக்குச் சென்றனர். இவர்கள் வருகை மற்ற சிஷ்யர்களுக்கு ஒருவித ஆறுதலை யளித்தது. இராமாநுஜர் ஆளவந்தாரின் தவ வுடம்பைத் தம் கண்களார உற்று நோக்கினர். ஆசாரிய புருஷனின் அருமைச் சரீரத்தையாயினும் காணும் பேறு கிடைத்ததே என்று மனத்திருப்தி கொண்டார். அவர் ஆளவந்தாரின் புனித தேகத்தைப் பார்த்து வருகையில் மூன்று விரல்கள் மட்டும் மூடியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். "இவை இப்படித்தான் எப்போதும் மூடியிருக்குமா?" என்று அவர் தம் பக்கத்திலுள்ளவர்களைக் கேட்டார். அப்போதுதான் மற்றவர்களும் இதைக் கவனித்தனர். "உயிருட னிருக்கையில் ஒழுங்கா யிருந்தனவே!" என்றனர் சிஷ்யர்கள்.

"ஒரு வேளை இம்மகானுக்கு ஏதேனும் மனக்குறை இருக்க வேண்டும்" என்று இராமாநுஜர் தமக்குள்ளாகவே கூறிக்கொண்டார்.

சிஷ்யர்களில் சிலர், "ஆமாம். ஆசாரியருக்குப் பிரம சூத்திரத்துக்கு விசிஷ்டாத்வைத பரமாக ஒரு பாஷியம் இயற்றுவதற்கில்லாது போய்விட்டதே! என்ற குறையுண்டு" என்று தெரிவித்தனர்.

"ஆண்டவன் அருளும் ஆளவந்தாரின் நல்லாசியும் இருக்கு மானால், நான் என் வாழுளில் ஆசாரியரின் எண்ணத்தை நிறை வேற்றி வைப்பேன். அதற்கு அவாது பரிபூரண கருணை இருக்கி றது என்பது உண்மையானால், மூடிய இவ்விரல்கள் திறக்குமாக!" என்று இராமாநுஜர் கூறினார். உடனே எல்லோரும் அதிசயிக்கும் படியாக மூடிய விரல்கள் திறந்துகொண்டன. ஆளவந்தாரின் முகம் சில கணங்கள் தெய்விகப் பொலிவுடன் திகழ்ந்தது.

இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்ட பின்னர், அங்கிருந்த சிஷ்யர் களும் மற்றவர்களும் 'ஆளவந்தாருக்குப் பின் இராமாநுஜர் தான் நமக் கெல்லாம் ஆசாரிய புருஷர். இவரே சத்திய சோதியைக் கொண்டு அந்தகாரத்தில் ஆழ்ந்துள்ள மக்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்தி நல் வாழ்வு அளிக்கக்கூடியவர்' என்று உணர்ந்து கொண்டனர். ஆகவே, வாரங்கர் ஆளவந்தாருடைய அந்திய கால விருப்பத்தையும் இராமா நுஜர்பால் கொண்டிருந்த அன்பையும் தெரிவித்தபோது அனைவரும் வாழ்த்தொலி செய்தனர்.

கடைசியாக, ஆளவந்தாருடைய அருமைச் சரீரம் சிறப்புடன் அடக்கஞ் செய்யப்பட்டது. அதன்பின், இராமாநுஜர் மகாபூரணர், வாரங்கர் முதலியவர்களிடம் விடைபெற்றுத் தம்மூருக்குத் திரும்பி னார். உடனே, அவர் திருக்கச்சி நம்பியாரிடஞ் சென்று ஆளவந்தா ரின் பிரிவுச் செய்தியைத் தெரிவித்தார். அவர் தம் குருமூர்த்தியின் மறைவைக் கேட்டுக் கதறினார். பின்னர் தாமும் தேறி அவர் இராமா நுஜரையும் தேற்றிப் பழையபடி ஆண்டவன் திருப்பணியில் ஈடுபட் டிருக்கும்படிப் பணித்தார்.

அவ்விதமே, இராமாநுஜர் திருமாலுக்கு அடிமை செய்து வரு கையில், திருக்கச்சி நம்பியாருடன் நெருங்கிப் பழக நேர்ந்ததால், அவரது பக்தியும் பெருமையும் புலனாயிற்று. ஆகவே, அவர் ஒரு நாள் நம்பியாரை நோக்கி, "ஐயனே! அடியேனைத் தங்கள் சிஷ்யர் களுள் ஒருவனாக ஏற்று, பரமனடி யடையும் பாவன மார்க்கத்தைக் காட்டியருள வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார். நம்பியார், "இராமாநுஜா! குருவாக இருப்பதற்கு நான் சிறிதும் அருகதையற்றவன்; இறைவன்பால் பக்தி பூண்டு, அவனது அரு ளுக்குப் பாத்திரமாக முயல்வதன்றி, எனக்கு வேறொன்றுந் தெரி யாது" என்று அடக்கமாகப் பதிலளித்தார்.

இராமாநுஜர் இதனால் மனஞ் சோர்வுற்றா ராயினும், உறுதி தளராது நம்பியாருடைய அத்தியந்த அன்பைத் தாம் எப்படியாயி

னும் பெற்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தார். மறுநாள் அவர் நம்பியார்பால் சென்று, "பெரியோய்! இன்று தாங்கள் எனது இல்லத்துக்கு எழுந்தருளி அமுது புசித்தருள வேண்டும்" என்று விநயமாக வேண்டிக் கொண்டார். நம்பியாரும் அதற்கு இணங்கினார். இராமாநுஜர் பெருமகிழ்வெய்தியவராய் வீட்டுக்கு ஓடோடியும் சென்று மனைவியிடம் விஷயத்தைச் சொல்லி அறுசுவை யுண்டிகளும் அருமையாகச் சமைக்கும்படிக் கட்டளையிட்டார். பின்னர், அவர் தாம் செய்யவேண்டிய மற்ற காரியங்களைப் பார்த்துவிட்டு, நம்பியாரை அழைத்துவர, தெற்கு வீதி வழியாகச் சென்றார்.

நான்காவது அத்தியாயம்

இல்வாழ்க்கையை விட்டுத் துறவு பூணல்

திருக்கச்சி நம்பியாரோ இராமாநுஜரின் பக்தி விநயத்தைக் கண்டு மகிழ்ந்து, அவர் தம் உச்சிஷ்டத்தை யுண்பதற்கே, தம்மை உணவருந்த அழைத்திருக்கிறார் என்று ஊகித்தறிந்து கொண்டார்; ஆதலால், அவர் இராமாநுஜர் தெற்கு வீதி வழியாக வரும் சமயம் பார்த்து வடக்கு வீதி வழியாகப் போய்த் தம் அன்பனின் மனைவி யாகிய தஞ்சம்மாளைக் கூப்பிட்டு, "அம்மா! இராமாநுஜர் வெளியே போயிருக்கிறாரா? அவர் வருவதற்கு நேரமாகுமா? அப்ப டியானால், எனக்கு உணவிட்டு அனுப்புங்கள். ஏனென்றால், நான் கோவிலில் திருத்தொண்டு புரிவதற்கு விரைவாகப் போகவேண்டும்" என்று கூறினார்.

தஞ்சம்மாள் அவர் விருப்பப்படியே உணவு படைத்தார். ஆனால், அவர் சாதியாசாரங்களில் பிடித்தமுடையவ ராதலால், நம்பி யாரை நடையிலே உட்காரவைத்து உணவருந்தச் செய்தார். நம்பி யார் இதையெல்லாம் லட்சியஞ் செய்யாது "அறுசுவை யுண்டிகளும் அமிர்தமயமா யிருக்கின்றனவே" என்று கூறியவாறு உண்டுவிட்டுச் சென்றார். அவர் போனதும், அவ்வம்மையார் எச்சலிலையை ஒரு கோலால் தள்ளி யெறிந்துவிட்டுச் சாணமிட்டுச் சுத்திசெய்து, இரண் டாம் முறை நீரில் மூழ்கலானார்.

இச்சமயத்தில் இராமாநுஜர் திரும்பிவந்து, "நம்பியார் வந் திருந்தாரா? அவருக்கு அமுது படைத்தாயா?" என்று கேட்க லானார். தஞ்சம்மாள் அவர் வந்துபோன விஷயத்தைச் சொன் னார். "ஆம்; நீ ஏன் இப்போது இரண்டாம் முறையாகக் குளிக்கி

ளாய்?" என்று கேட்டார் இராமாநுஜர். "நன்ருயிருக்கிறதே நீங்கள் கேட்பது? நம்பியார் சூத்திர ரல்லவா! அவர் உண்ட இடத்தைச் சுத்தஞ் செய்ததனுல் ஏற்பட்ட தீட்டு போவதற்குத் தலை முழுகுகிறேன்" என்று கூறினுர்.

இராமாநுஜருக்கு உண்டான ஏமாற்றமும் கோபமும் விவரிக்க வொண்ணுததா யிருந்தது. தம் மனைவியின் ஜாதி யகம்பாவத்தையும் அறியாமையையும் நினைத்து வருந்தினுர். "பரம பாகவதரைச் சூத்திர ரென்று சொல்லிய உன் நாக்கு இற்று விழாம லிருக்கிறதே! மகான் நம் இல்லத்துக்கு எழுந்தருளுவதற்கு நாம் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டுமே! பாவி கெடுத்தாயே!" என்று கூறி அவ்வம்மையாரது செயலை வன்மையாகக் கண்டித்தார்.

பின்னர், இராமாநுஜர் நம்பியாரின் யோசனைப்படி ஆளவந்தாரின் சிஷ்யரான மகா பூரணரை அடைவதற்கு ஸ்ரீரங்கம் நோக்கிச் சென்றுர். இதற்குள் ஸ்ரீரங்கத்திலும் மற்ற சிஷ்யர்களின் வற்புறுத்தலுக்கிணங்க, மகாபூரணர் இராமாநுஜரை அழைத்துவர தம் மனைவியாருடன் காஞ்சிக்கு வரலானுர். இவ்விதம் வந்த இவ்விருவரும் மதுராந்தகத்தில் ஸ்ரீ தடாக பாலகாதருடைய கோயிலில் சிறிதும் எதிர்பாராவகையில் சந்தித்து அளவளாவலாயினர். 'இது தெய்வச் செயல்!' என இருவரும் வியப்புற்றனர்.

அதன் பின், இராமாநுஜர் தாம் ஸ்ரீரங்கம் நாடிவரும் கருத்தைத் தெரிவித்து, இக்கணமே தம்மைச் சிஷ்யராக ஏற்று உய்யும் நெறி காட்டவேண்டுமென்று மகாபூரணரை வேண்டிக்கொண்டார். ஆத்ம ஞானமடையும் விஷயத்தில் இராமாநுஜருக்குள்ள ஆவலைக் கண்ட மகாபூரணர் அக்கோயில் பிராகாரத்தில் ஏகாந்தமாய் அழைத்துச் சென்று பஞ்ச சம்ஸ்காரங்களை ஆதாரமாகக் கொண்ட வைணவ சமயத்தின் மகா மந்திரத்தை முறைப்படி உபதேசித்து அதற்குரிய முத்திரைகளையும் தந்தருளினுர். ஆளவந்தாரின் கட்டளைப்படி அவர் கூறியருளிய உபதேச மந்திரங்களையே தாம் உபதேசித்ததாக பூரணர் குறிப்பிட்டார்.

மறுநாள் மகாபூரணரும், இராமாநுஜரும் காஞ்சிபுரத்துக்கு வந்தனர். திருக்கச்சி நம்பியார் மகாபூரணரின் வருகையை யறிந்து எதிர்கொண்டு அழைத்து உபசரித்தார். இராமாநுஜர் மகாபூரணரையும் அவரது மனைவியையும் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்று அதிதிகளாக உபசரித்து வரலானுர்.

மகாபூரணர் ஆறு மாத காலம் அங்கிருந்து இராமாநுஜருக்கு பிரபந்தத்தில் முதல் இரண்டாயிரம் பாடல்களையும் வியாச சூத்திரத்தையும் பாடஞ் சொல்லிவந்தார்.

இவ்வித மிருக்கையில், ஒருநாள் வைஷ்ணவனொருவன் பசித்து வரவும், இராமாநுஜர் தம் மனைவியை அழைத்து அவனுக்கு அமுது படைக்கச் சொன்னார். அன்ன மிருந்தும் இல்லையென்று அவ்வம்மையார் கூறிவிட்டார். பின் இதையறிந்த இராமாநுஜர் தம் மனைவியை வெகுவாகக் கோபித்துக் கொண்டார்.

தஞ்சம்மாள் தன் இயற்கைக் குணத்தை விடவில்லை. மற்றொரு நாள் அவ்வம்மையார் கிணற்றில் நீர் முகக்கையில் நீட்டு பட்டு விட்டதென்று மகாபூரணருடைய மனைவியாருடனேயே சண்டை போடலானார். மகாபூரணர் காதில் இது விழவும், அவர், "இனி நாம் இவ்விடத்திலிருக்கத் தகாது" என்று கூறி மனைவியை அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் புறப்பட்டு விட்டார்.

இச்சமயத்தில் இராமாநுஜர் ஸ்ரீ பெரும்பூதூருக்குப் போயிருந்தார். ஆதலினால், அவர் ஊருக்குத் திரும்பி வந்ததும் மகாபூரணர் இல்லாததை யறிந்து திடுக்கிட்டு விஷயத்தை விசாரிக்கலானார். தம் மனைவியின் கொடுங்குணத்தினால் தான் அவர் பிரிந்து போக நேர்ந்தது என்று அறிந்ததும், இராமாநுஜர் அடைந்த வருத்தம் சொல்லி முடியாது. இம்முறை அவர் தம் மனைவியின் குற்றத்தை மன்னிக்க முடியவில்லை. 'ஏறுமாறாகவுள்ள மனைவியுடன் இனி வாழமுடியாது' என்று தீர்மானித்து அவர் தஞ்சம்மாளைத் தாய் வீட்டுக்கு அனுப்பி விட்டார். அதற்கு அப்புறம் அவர் மனைவியைப்பற்றி நினைக்கக் கூட இல்லை. தம் இல்வாழ்க்கையை அவர் அத்துடன் முடித்துக் கொண்டார்.

அதன் பின், இராமாநுஜர் வரதராஜப் பெருமானின் சந்நிதி சென்று தமக்குத் துறவு நிலையளிக்க வேண்டுமென்று முறையிட்டார். 'வேண்டுவோர் வேண்டுவதே ஈவானா'கிய எம்பெருமான் தமது அர்ச்சகர்பால் ஆவேசித்து, "நீ திரிதண்டமும் காஷாயமும் தரித்துக் கொள்ளலாம். இனி **எதிராஜ ஸ்ரீ இராமாநுஜ** முனி என அழைக்கப்படுவாய்" என்று கூறினார். இராமாநுஜர் பக்தி பரவசரானார். அடுத்தபடி பெருமான் திருக்கச்சி நம்பியாரை அழைத்து, இராமாநுஜருக்குத் தகுந்த ஒரு மடத்தை ஏற்படுத்தி விருதுகளுடன் மடாதிபதியாக்கி விடுமாறு கட்டளையிட்டார். நம்பியார் பெருமகிழ்வுற்று, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்து இராமாநுஜ முனியை **மடாதிபதி** யாக்கினார்.

இராமாநுஜர் மடாதிபதியான பின்னர், ஆண்டான், ஆள்வான் முதலியவர்கள் அவருக்குச் சிஷ்யர்களாயினர். அதுமட்டுமா! இவருக்கு ஆதியில் ஆசாரியராயிருந்த யாதவப் பிரகாசரே இவருடைய பெருமையுணர்ந்து அன்னையாரின் அமுதமொழியையும் அநுசரித்து இவருக்குச் சிஷ்யராகி, கோவிந்த ஜீயர் என்ற தீக்ஷா நாமமும் பெற்று வைணவ சந்நியாசியானு ரென்றால், அதிகஞ் சொல்வானேன்!

இந்நிலையில் ஸ்ரீரங்கத்திலுள்ள ஆளவந்தாரின் சிஷ்யர்கள் இராமாநுஜரைத் தங்கள் ஆசாரியராக்கிக்கொள்ள விரும்பி ஸ்ரீரங்கநாதரைப் பிரார்த்தித்து, அவரை அழைத்துவர வரரங்கரைக் காஞ்சிக்கு அனுப்பினர். வரரங்கர் காஞ்சி சென்று இராமாநுஜரிடஞ் செய்தி தெரிவித்து திருக்கச்சி நம்பியாரின் உதவியினால், அவரை ஸ்ரீரங்கத்துக்கு அழைத்து வந்தார். மகா பூரணர் தலைமையில் ஆளவந்தார் சிஷ்யர்களும் ஸ்ரீரங்க வாசிகளும் இராமாநுஜரை மரியாதையுடன் வரவேற்றனர். இராமாநுஜர் ஸ்ரீரங்க நகருள் நுழைந்ததும் நேராக ஸ்ரீரங்கநாதர் சந்நிதி சென்று பெருமானைப் பக்தி பரவசத்தோடு வணங்கினார். இறைவன் திருவுள்ளக் குறிப்பின்படி, திருவரங்கம் பெரிய கோயிலின் சகல பொறுப்பும் காரிய நிர்வாக அதிகாரமும் இராமாநுஜருக்கு அளிக்கப்பட்டது. ஆகவே, அவர் பெருமானின் கட்டளையை மறுக்கத் துணியாது, கோயில் நிர்வாகத்தை ஏற்று நித்திய நைமித்திய பூஜைகள் ஒழுங்காக நடைபெறுவதற்காக ஏற்பாடுகளை கவனிக்கத் தொடங்கினார். மடப்பள்ளியை மேற்பார்வை செய்ய ஆண்டானை நியமித்தார். அகளங்கர் என்னும் மற்றொரு சிஷ்யரை கோயில் ஊழியர்களுக்கு மேலதிகாரியாக்கித் திருப்பணிகள் முறைப்படி நடக்குமாறு செய்வித்தார்.

இதன்பின், இராமாநுஜர் நம்மாழ்வார் திருவாய் மொழியையும், பரகாலர் பெரிய திருமொழியையும் இன்னிசையுடன் பாட விரும்பி, வரரங்கரிடம் பயின்றார். பெரும் புலமை வாய்ந்தவராகவும், பேரறிஞராகவும் இராமாநுஜர் இருப்பினும், வேத இரகசியங்களை ஆசாரிய பரம்பரையிடமிருந்து அறிந்துகொள்ள விரும்பினார். ஆகவே, அவர் தமது விருப்பத்தை மகா பூரணரிடம் தெரிவித்தார். அவர் இராமாநுஜருடைய மன பக்குவத்தை யறிந்தவராதலால், சிறிதுந் தயங்காது இவருக்கு வேதத்தின் விழுப்பொருளை யெல்லாம் விரித்துரைத்தார். அதன்பின், மகாபூரணர் வேதமந்திர உபதேசத்தை ஸ்ரீ கோஷ்டி பூரணர் பால் பெறும்படி இராமாநுஜருக்குக் கட்டளையிட்டார்.

அதன் வண்ணமே, இராமாநுஜர் கோஷ்டி பூரணரிடஞ்சென்று வணங்கித் தமக்கு மகா வாக்கியத்தை உபதேசஞ் செய்யுமாறு வேண்

டிக்கொண்டார். ஆனால், அவர் இவரது பரிபக்குவத்தைச் சோதித்துப் பார்க்கக் கருதி, 'இன்று வா, நாளை வா' என்று அலக்கழிக்கலானார். இராமாநுஜருக்கு வருத்தந்தான்; ஆனாலும் மனந் தளரவில்லை. கோஷ்டி பூரணர் கடைசியாக மனமிளகி, "இராமாநுஜா, உன் மன உறுதியை மெச்சினேன்; உன் விருப்பப்படியே இன்று உனக்கு மகா மந்திரத்தை உபதேசிக்கிறேன்; ஆனால், இதை வேறு யாருக்கும் உபதேசிக்கக்கூடாது, தெரியுமா!" என்று எச்சரிக்கை செய்து, முறைப்படி அவருக்கு அஷ்டாக்ஷர மகா மந்திரத்தை உபதேசஞ் செய்தார். ஆனால், இராமாநுஜர் முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி அதை அனைவருக்கும் வெளிப்படுத்தி விட்டார். கோஷ்டி பூரணர் அவரது பரந்த நோக்கத்தைப் பாராட்டி, பகவத்கீதையின் கடைசி சுலோகத்தின் இரகசியத்தை உபதேசித்தருளினார். இராமாநுஜர் அகம் என்ற நினைப்பை அறவே விட்டு, 'நாமும் சகல ஜீவராசிகளும் ஒன்றே' என்ற உண்மையை உணர்ந்து, தம் செயல்களை யெல்லாம் இறைவன் செயலாக்கி அவனது திருவடிகளில் சரணாகதியடைந்து விட்டார். இதிலிருந்து எல்லோரும் இராமாநுஜரை 'எம்பெருமான்' என்று அழைக்கலாயினர்.

ஐந்தாவது அத்தியாயம்

ஆசாரியரா யமர்ந்து புரிந்த செயல்கள்

இதன்பின், இராமாநுஜர், ஆளவந்தாரின் மற்ற சிஷ்யர்களான மாலாதாரர், வரரங்கர் ஆகியவர்களிடம் திவ்வியப் பிரபந்தப் பாடல்களின் உண்மைப் பொருள்களைக் கேட்டு உணர்ந்தார். ஆளவந்தார் இராமாநுஜருக்கு நேரில் உபதேசிக்க முடியாமல்போன நிலையில் தம் பிரதம சிஷ்யர்களிடம் சொல்லிவைத்துக் கூறும்படி கட்டளையிட்டிருந்தவாறு அவர்களும் அவருக்கு உபதேசஞ் செய்து வைக்கலாயினர். அத்துடன், அவர்கள் தங்கள் குமாரர்களையும் பிறரையும் இராமாநுஜருக்குச் சிஷ்யர்களாக்கி வைத்தனர்.

நாளுக்குநாள் இராமாநுஜரிடம் சிஷ்யர்கள் பலர் வந்து குவிந்தனர். அவரும் அவரவர் பக்குவத்துக்குத் தகுந்தபடி வைணவ சமயக் கொள்கைகளைப் போதித்து வந்தார். அத்துடன், இறைவன் உண்மையை விசிஷ்டாத்துவைத சமய முறையில் உலகோருக்கு வெளிப்படுத்த வேண்டி, கத்யத்திரயம் (சரணாகதிகத்யம்), நித்திய கிரந்தம் முதலிய நூல்களை இயற்றினார்.

இதனிடையே, ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகிகள் சிலர் இராமாநுஜர்பால் பொருமை கொண்டு அவரைத் தொலைத்துவிடச் சூழ்ச்சி செய்யலாயினர். இராமாநுஜர் நாடோறும் தம் துறவு நிலைக்கேற்ப, இல்லறத்தாரிடம் இரந்துண்பது வழக்கமாதலால், அவர்களில் ஒருவரைக் கொண்டு அவருக்கு இடும் உணவில் நஞ்சு கலந்துவிடும்படி செய்தனர். இராமாநுஜருக்கு இது தெரிந்து அன்றிருந்து இரந்து உண்ணும் வழக்கத்தை நிறுத்திவிட்டார். இதன்பின், இராமாநுஜர் தம்முடன் வாதிட வந்த எக்ஞமூர்த்தி என்னும் சகலகலா வல்லவரை வெற்றி கொண்டு சிஷ்யராகச் செய்தார்.

இவ்விதமிருக்கையில், இராமாநுஜருக்கு வேங்கடேசப் பெருமானைத் தரிசித்து வரவேண்டுமென்று விருப்பமுண்டாகவே, திருப்பதிக்குப் பிரயாணமானார். போகும் வழியில் எக்ஞேசன் என்ற செல்வந்தனின் அகம்பாவத்தை யடக்கி, வரதார்யர், அவரது மனைவியான லக்ஷ்மியம்மாள் ஆகியவர்களுடைய உண்மையன்பை வெளிப்படுத்தினார். கடைசியாக, இராமாநுஜர் திருப்பதி சென்று ஸ்ரீ வேங்கடாசலபதியைத் தரிசித்து மகிழ்ந்த பின், தம் அம்மானான சைல பூரணர், தம்பி கோவிந்தர் முதலியவர்களுடன் அளவாளவி விட்டு, கோவிந்தரை அழைத்துக் கொண்டு, ஸ்ரீரங்கம் திரும்பினார். போகும்போதும் வரும்போதும் அவர் காஞ்சி சென்று திருக்கச்சி நம்பியாரைக் கண்டு வணக்கஞ் செலுத்தினார்.

திருப்பதியி லிருந்து வந்து சில நாட்களானதும், இராமாநுஜருக்கு ஆளவந்தாரின் புனித தேகம் அடக்கஞ் செய்யப்பட்ட சமயத்தில் பிரம சூத்திரத்துக்கு விசிஷ்டாத்வைத பரமாகப் பாஷியம் எழுத முடியாமற் போய்விட்டதே என்று அவரது அந்தியகால மனக்குறையைத் தாம் நிறைவேற்றி வைப்பதாகக் கூறிய வாக்குறுதி நினைவுக்கு வந்தது. ஆகவே, அவர் தமது சிஷ்யர்களையும் அன்பர்களையும் ஒன்றுகூட்டி, "உலக மக்கள் பொய்யிலே புலம்பிக் கிடந்துழல்கின்றனர். மத வாதிகள் தத்தம் மதமே சிறந்தது என்று வாதித்து உண்மையை அறியவொட்டாது அவர்கள் அறிவைக் குழப்பி வருகின்றனர். ஆகவே, இந்நிலையைப் போக்க. உண்மைப் பொருளை உபதேசிக்கவேண்டும். ஆளவந்தாரின் விருப்பத்தை யநுசரித்து பிரம சூத்திரத்துக்கு என் அறிவுக் கெட்டிய வரையில் விசிஷ்டாத்வைத பரமாகப் பாஷியம் எழுதி உலகுக்கு உண்மையை உணர்த்த விரும்புகிறேன்" என்று தம் எண்ணத்தைத் தெரிவித்தார். அவர்கள் 'அறியாமை யிருளில் அலமந்துழலும் மக்கள் உய்ந்தனர்'

என்று மகிழ்ந்து, " அவ்விதமே செய்தருள வேண்டும் " என வேண்டிக் கொண்டனர்.

இவ்விதம் அனைவருடைய சம்மதத்தையும் பெற்று, இராமானுஜர் தாம் கூறுவதை ஆழ்வானை எழுதி வரச் செய்து வியாசரின் பிரம சூத்திரத்திற்கு விசிஷ்டாத்வைத பரமாகப் பாஷியம் செய்யலானார். இதையடுத்து அவர் ஸ்ரீ பகவத்கீதைக்கு ஒரு பாஷியமும் வேதாந்த சாரம், வேதாந்த தீபம், வேதாந்த சங்கிரகம் முதலிய நூல்களையும் எழுதினார்.

இராமானுஜர் சாதி உயர்வு தாழ்வு கருதாது, தனுர்தாசன்போன்ற தாழ்ந்த மக்களிடத்திலும் சரிசமத்துவமாகப் பழகுகிறாரே யென்று வெளியார் மட்டு மல்லாது சிஷ்யர்களும் வருத்தப்படலாயினர். இராமானுஜர் அவர்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்தினார். பல அற்புதங்களைச் செய்து காட்டினார்.

கடைசியாக, அன்பர்கள் வேண்டுகோளின்படி, இராமானுஜர் விசிஷ்டாத்வைத சமய உண்மைகளை உலக மக்களிடையே பரப்ப வேண்டி, ஸ்ரீரங்கத்தை விட்டுப் புறப்பட்டுத் தேச யாத்திரை செய்யலானார். சோழ நாட்டைச் சுற்றி வருகையில் ஸ்ரீபரகாலர் பிறந்த இடமான திருவாழி திருநகரியில் இராமானுஜருக்கு ஒரு சிறு அநுபவம் ஏற்பட்டது. அங்கு அவர் தங்கி யிருக்கையில் ஒருநாள் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்புகையில், எதிரே புலைச்சி யொருத்தி வருவதைக் கண்டு, "சற்று ஒதுங்கி நில், அம்மா! நான் அந்தப் பக்கம் போக வேண்டும்" என்று பேதபுத்தியோடு கூறினார்.

அம்மங்கை சிறிதும் விலகாமல், " ஐய! என்னை எப்பக்கம் ஒதுங்கச் சொல்கிறீர்கள்? உயர்குலத்தோராகிய நீங்கள் இருக்கும் பக்கமா? என் பின்புள்ள திருக்கண்ணபுரம் கோயில் பக்கமா? பரகாலர் இறைவனைக் கொள்ளையடித்த திருமணன்கொல்லை என்ற இடத்தின் பக்கமா? என் இடப்பால் உள்ள திருவாழிநாதர் பக்கமா?" என்று கேட்கலானாள்.

இராமானுஜர் பிரமித்துப் போய்விட்டார். அப்போதுதான் அவருக்கு வேற்றுமை யுணர்ச்சியின் விளைவு தெரிந்தது. எனவே அவர், " அம்மா, என்னை மன்னியுங்கள். சாதி யகம்பாவமும் கல்விக் கர்வமும் என் அறிவை மறைத்துவிட்டன. முற்றத் துறந்த முழு முனிவனுகியும் பேதபுத்தியால் பேதலித்த எனக்குச் சரியாக அறிவு புகட்டினீர்கள்" என்று கூறி வணங்கி அவளைத் தம்முடன் அழைத்

நுச் சென்று இறைவன் பக்கத்திலேயே இடங்கொடுத்து இருக்கச் செய்தார்.

பின்னர், இராமாநுஜர், பாண்டி நாட்டுக்குச் சென்று, மதுரை, குருகூர், திருநெல்வேலி, திருக்குறுங்குடி, திருவெண் பரிச்சாரம், திருவெட்டாறு முதலிய ஊர்களையும், வடநாட்டில், மதுராபுரி, வைகுந்தம், துவாரகை, அயோத்தி, பதரி, நைமிசாரண்யம், பிருந்தா வனம் முதலிய இடங்களையும் சுற்றி பற்பல மதவாதிகளோடு வாதாடி, விசிஷ்டாத்வைத மதக் கொள்கையை நிலைநிறுத்தி வரலானார். இவ்வகையில், இவருக்குப் பலவிதமான இடையூறுகளும் ஆபத்துக ளும் ஏற்பட்டன. ஆனாலும், இறைவன் அருளால், எல்லாம் நலமே யாயின.

திருப்பதிக்கு இராமாநுஜர் சென்றபோது அம்மலைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி விஷயத்தில் சைவர்களுக்கும் வைண வர்களுக்கும் இருந்த தகராறு இவருக்குத் தெரிந்தது. ஆகவே, அவர் அம்மூர்த்தம் மகா விஷ்ணுவே என்று புலப்படுத்தி வழக்கைத் தீர்த்து வைத்தார். கடைசியாக, தொண்டை நாட்டைச் சுற்றிக்கொண்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார்.

இவ்விதம், இராமாநுஜர் விசிஷ்டாத்வைத சமயக் கொள்கை யைப் பரவச் செய்யும் விஷயத்தில் அறுபது ஆண்டுகள் கழிந்தன. இராமாநுஜர் மதம் மக்களிடையே வேரூன்றி விட்டதைக் கண்ட வீர சைவனான சோழ அரசனொருவன் மதக் குருக்கள் தூண்டுதலின்மீது இராமாநுஜரைப் பலவிதமாகத் துன்புறுத்தலானான். ஆகவே, இராமாநுஜர் தம் சிஷ்யர்களுடன் நரசிம்மபுரம் போய்த் தங்கியிருந்து வைணவ மத சித்தாந்தத்தைப் பரப்பி வந்தார். இராமாநுஜர் சமண சமயத்தவர்களோடும் வாது புரியவேண்டியதாயிற்று.

இதன்பின், இராமாநுஜர் டில்லிமா நகரத்துக்குச் சென்று ஸ்ரீராமப் பிரியர் விக்கிரகத்தைத் தரிசித்தார். அங்கு டில்லி பாதுஷா வின் அன்பைப் பெற்று பெரிய வைணவ மடமொன்றைக் கட்டி, வைணவ சமயம் பரவ ஏற்பாடு செய்தார்.

இவ்விதம் இராமாநுஜர் ஸ்ரீரங்கத்தை விட்டு வந்து பன்னிரண்டு வருஷ காலமாயிற்று. இவருக்கும் இவர் காரணமாக மகாபூரணருக் கும், ஆழ்வானுக்கும் துன்பத்தைக் கொடுத்து வந்த சோழ மன்னன் தொண்டைப் பிளவை, நீரா வயிற்றுவலி ஆகிய நோய்களால் பீடிக்கப் பட்டுக் கடைசியாக மரணமடைந்தான். இச்செய்தியைச் சிஷ்யர் கள் வாயிலாக அறிந்த இராமாநுஜர் நரசிம்ம க்ஷேத்திரத்தினின்றும்

உடனே புறப்பட்டு ஸ்ரீரங்கத்தை யடைந்தார். இவரது வருகையை யறிந்த மேற்படி சோழனுடைய மகன் ஓடோடி வந்து இவர் காலில் விழுந்து தந்தைக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டதோடு, அவரது சிஷ்யனுமானான்.

இராமாநுஜர் ஸ்ரீரங்கம் வந்த பின்னர் ஒருமுறை காஞ்சிபுரம் சென்று வரதராஜப் பெருமானைத் தரிசித்து வந்தார்.

இதனிடையே, மகாபூரணர், சிஷ்யன் ஆழ்வான் முதலியவர்கள் வைகுந்த பதவி யடைந்தனர். இராமாநுஜர் தமக்குப்பின் ஆசார்யர் பட்டத்துக்கு வருவதற்கு ஆழ்வான் குமாரர் பராசரரைப் பயிற்றுவிக்கும்படி கோவிந்தர்பால் ஒப்படைத்தார். பின் தாமும் அவருக்கு இரு பேருண்மைகளை உபதேசித்தார். பராசரருக்கு '**ஸ்ரீ வேதாந்தசார்ய பட்டர்**' என்ற பெயரிடப்பட்டது.

இதனிடையே ஆண்டான் குமாரன் இராமாநுஜர், ஆசார்யார் இராமாநுஜர் அனுமதி பெற்று, அவர் ஞானவொளி பெற்ற புனித பூமியான ஸ்ரீ பெரும்பூதூரில் அவருடைய விக்கிரகமொன்றை வைத்தான்.

இங்ஙனம் சிறிது காலம் சென்றது. இராமாநுஜர் தாம் இறைவன் திருவடி சேர வேண்டிய காலம் சமீபித்துவிட்டது என்று உணர்ந்து பட்டரை ஸ்ரீ ரங்கநாதப் பெருமான் சந்நிதிக்கு அழைத்துச் சென்று அவருக்குச் சம்பிரதாயமாகச் செய்யவேண்டிய கௌரவச் சடங்குகளைப் புரியும்படி செய்வித்தார். பின்னர், அங்குள்ளவர்களை நோக்கி, "மகா வைணவர்களே! இதோ இருக்கும் பட்டர் தான் எனக்குப்பின் ஆசார்ய ஸ்தானத்தை வகிக்கப்போகிறவர். நீங்களனைவரும் என்னைப்போலவே இவரைப் பாவித்து உபதேசம் பெற்று உய்வீர்களாக" என்று கூறினார். எல்லோரும் ஆசாரியனின் ஆணையை இறைவன் ஆணையாகக் கொள்ளலாயினர்.

கடைசியாக, ஒரு நாள் இராமாநுஜர் தாம் இவ்வுலகில் செய்ய வேண்டிய வேலையை ஒருவாறு செய்து முடித்து விட்டதாகவும் இனி தமக்கு இங்கிருக்கவேண்டிய அவசியமில்லை யென்றும் தம்மை அழைத்துக் கொள்ளும்படியும் ஸ்ரீ ரங்கநாதப் பெருமானை வேண்டிக் கொண்டு, மடத்துக்கு வந்து சிஷ்யர்களை யெல்லாம் ஒன்று கூட்டி, அவர்களுக்குக் கூறவேண்டிய இதோபதேசங்களை யெல்லாஞ் செய்தார். தம் ஆசாரியனுடைய திருக்குறிப்பை யறிந்த சிஷ்யாக்களனைவரும் அவரை எப்படி பிரிந்திருப்பது என்று ஆற்றாமை கொள்ள

லாயினர். இராமாநுஜர் அவர்களுக்கெல்லாம் தேறுதல் கூறியனுப்பி விட்டு, ஏகாந்தமாயிருந்து தியானஞ்செய்து திருமால் திருவடியிணை களைச் சேர்ந்தார். இராமாநுஜரின் பூதவுடல் இவ்வுலகினின்றும் மறைந்தாலும், அவர் நிலை நாட்டிச் சென்ற விசிஷ்டாத்வைத சமயக் கொள்கை என்றும் நின்று நிலவி, மக்களை வாழ வைத்து வருகிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ !

முற்றிற்று

விசிஷ்டாத்வைத மத தத்துவம்

கடவுள் தத்துவத்தையும், அத்தத்துவத்தை விவரிக்கும் சமய உண்மையையும் விளக்கும் சமயங்கள் உலகில் பல. ஆனால், அவற்றின் அடிப்படையான உண்மை ஒன்றே. இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், முகம்மதிய சமயம், பௌத்த சமயம், சமண சமயம் என்று உலகிலுள்ள சமயங்கள் பலவிதப் பெயர்களோடு விளங்குகின்றன. ஆயினும், அவை எல்லாவற்றி னுடையவும் அடிப்படையான கொள்கைகள் மூன்று பிரிவுகளுக்குள் அடங்கிவிடுகின்றன. துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என அவை பெயர் பெறும். பதி, பசு, பாசம் என முப்பொருள் நிச்சயத்தை வற்புறுத்தி, பசுவாகிய ஆன்மா தன்னைப் பற்றி நிற்கும் பாசத்தை யறுத்துக் கொண்டு, முக்திப் பேற்றை எய்த வேண்டுமானால், பதியாகிய கடவுளிடம் பக்தி பூண்டொழுக வேண்டு மென்று கூறுவது துவைத மதத்தின் சித்தாந்தமாகும். மேற்குறித்த முப்பொருள் நிச்சயத்தை ஒப்புக்கொள்வதோடு, ஆன்மா ஆண்டவனின் திருவருளைப் பெற வேண்டுமானால், பக்தியுடன் ஞானமும் அவசியம் என்று விவரிப்பது விசிஷ்டாத்வைத மதத்தின் முடிந்த முடிபாகும். பிரம்மமும் ஆன்மாவும் ஒன்றே என்றும், ஆன்மா பிரம்மத்தின் பிரதி பிம்பமே யொழிய, வேறு அல்ல என்றும் கூறிக் கேவலம் ஞானத்தையே பிரதானமாக விவரிப்பது அத்வைத மதத்தின் அடிப்படைக் கொள்கையாகும். துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய மூன்று மதங்களில் விசிஷ்டாத்வைத மதத்தின் தனிச்சிறப்பு என்ன வென்றால், பக்தி, ஞானம் இவ்விரண்டுக்கும் ஒப்ப இடங்கொடுத்து, இருதய உணர்ச்சியுடனே ஆத்ம ஞானத்தையும் ஊட்டி, மனித சமுதாயத்தின் துன்ப நிவர்த்திக்குப் பக்தியும் ஞானமும் மிக இன்றியமையாதவை என்று வற்புறுத்துவதுதான்.

இந்த விசிஷ்டாத்வைத மதத்திலும் இரு பிரிவுகள் உள. வைஷ்ணவ விசிஷ்டாத்வைதம், சைவ விசிஷ்டாத்வைதம் என அவை வழங்கப் பெறும். இவ்விதம் இருப்பினும், விசிஷ்டாத்வைத மதம் என்றால், பொதுவாக வைஷ்ணவ சமயத்தைக் குறிப்பதாகத்தான் பெரும்பாலான மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, சைவ விசிஷ்டாத்வைதம் இப்பொழுது சைவ சித்தாந்தம் என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன், சைவ விசிஷ்டாத்வைதம் தத்துவ முறையில் வைஷ்ணவ விசிஷ்டாத்வைதத்தோடு பெரிதும் வேறுபட்டிருக்கிறது. அது நிற்க,

விசிஷ்டாத்வைதம் என்ற சொல் விசிஷ்டம், அத்வைதம் என்ற இரு பதங்களால் ஆக்கப்பட்டது. விசிஷ்டம் என்றால் விசேஷணத்துவம் என்றும், அத்வைதம் என்றால் எகத்துவம் என்றும் பொருளாகும். அதாவது, விசேஷணம் ஆவது சித்தையும் அசித்தையும் தேகமாக வுடையது என்றும், சித்தையும் அசித்தையும் லக்ஷணங்களாக உள்ள எகத்துவம் என்றும் திரண்ட பொருளாகும்.

பரப்பிரம்ம மென்பது உண்மையில் ஒன்றேயாகும். அதை அநந்த நாமங்களால் அழைக்கிறார்கள். சித்தும் உண்மைப் பொருளே; அசித்தும் உண்மைப் பொருளே. பரப்பிரம்மம் இவ்விரண்டுடனும் என்றும் பிரிவின்றிச் சேர்ந்திருக்கிறது. இந்த அவஸ்தையில்தான் பிரம்மத்தை அறியலாம். ஆனால் இதனால் அது ஜடமாய் விடுவதில்லை. அது சித்திலிருந்தும் அசித்திலிருந்தும் வேறானதேயாகும்; ஞானாத்மகமா யுள்ளது. பரப்பிரம்மத்துக்குச் சர்வ சுதந்திரமும் உண்டு. மற்றிரண்டும் அதைச் சார்ந்திருக்கின்றன. இவை இரண்டும் தனித்தனி வேறு பொருள்கள் அல்ல. ஒரு பொருளும் அதன் இயல்பும்போல ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாதபடி சேர்ந்திருக்கின்றன. சித்தும் அசித்தும் பரப்பிரம்மத்துக்கு உடலாகும். பரப்பிரம்மம் உயிராகும். ஒன்று இல்லாமல் மற்றது இருக்க வியலாது.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பானது அபிருதக் ஸித்தம் எனப்படும். இத்தொடர்பு இடைக்காலத்தில் உண்டானதில்லை; இத்தொடர்புக்கு முடிவும் கிடையாது. ஆனாலும், மூன்றுக்கும் இடையே வித்தியாசம் அதிகமாக இருக்கிறது. அவ்வித்தியாசம் அநுபாதிகமுமன்று; மாயாகிருதமுமன்று. இம்மூன்றும் ஒன்றோடொன்று சேர்ந்தே இருக்கின்றன. பரப்பிரம்மம், சித்து, அசித்து ஆகிய மூன்றும் ஒரே தத்துவமாகும். பரப்பிரம்மம், சித்து, அசித்து என்ற லட்சணங்களுக்கு இருப்பிடமாகும். இவ்விதம், சித்து, அசித்து, பரப்பிரம்மம் ஆகிய முப்பொருள்களைப் பற்றிய உண்மையை ஒவ்வொருவரும் ஞான குருவாயிலாக முறைப்படி அறிந்து, காமக்குரோதாதிகளை நீக்கி உலகப் பற்றை விட்டொழித்து, சுக துக்கங்களை ஒன்றாகப் பாவித்து, தான் செய்யும் காரியங்களை யெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணமாக்கிச் சதா ஈஸ்வர தியானம் செய்து வந்தால் கன்மமொழிந்து ஆத்ம சாக்ஷாத்காரமும் மோக்ஷ சாம்ராஜ்யமும் எய்தலாம். இவ்வித கொள்கைகளை விவரிப்பதே விசிஷ்டாத்வைத மத தத்துவமாகும்.

Printed at the Rajan Electric Press, Madras. (1944)

P. T. BELL'S POPULAR BOOKLETS

The publishers present to the student public the undermentioned books on Educational subjects which will be found very useful to them. They have been very carefully prepared by experienced specialists in the subjects dealt with in the booklets.

Price Annas Two Each

1. Model Essays
2. Choice Letters
3. English Proverbs
4. Tamil Proverbs
5. Telugu Proverbs
6. Dictionary of English Idioms
7. How to use English Idioms
8. A hand book of good English
9. General knowledge for one and all
10. Great words of Eminent Men
11. How to Talk in Public
12. Handy Debator
13. The worlds great writers
14. Modern Inventions
15. How to keep good health
16. English - English Dictionary
17. English - Tamil Dictionary
18. English - Telugu Dictionary
19. Tamil - Tamil Dictionary
20. Essays in Tamil (பொது அறிவுக் கட்டுரைகள்)

Cost & Postage	for 5 Books	0—12—0
,, ,,	for 10 Books	1— 8—0
,, ,,	for 15 Books	2— 4—0
,, ,,	for 20 Books	3— 0—0

Additional 3 annas will have to be sent, if the books are to be sent by Registered.

Apply to: P. T. BELL & Co., 7, Sunkurama Chetty St., G.